# சர் சீவூசாகூர் ராம்கூலம் மற்றும் சர் அனிருத் ஜுக்னாத் ஆகியோரின் நினைவிடங்களில் பிரதமர் மரியாதை செலுத்தினார் (மார்ச் 11, 2025)

மார்ச் 11, 2025

பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் இன்று பாம்பல்மஸ்ஸில் அமைந்துள்ள சர் சீவூசாகூர் ராம்கூலம் பொட்டானிக் கார்டனில் சர் சீவூசாகூர் ராம்கூலம், சர் அனிருத் ஜுக்னாத் ஆகியோரின் நினைவிடங்களுக்கு சென்று மரியாதை செலுத்தினார். மரியாதை செலுத்தும் நிகழ்வில் பிரதமர் அவர்களுடன் மொரிஷியஸ் பிரதமர் திரு. நவீன் சந்திரா ராம்கூலம் அவர்களும் கலந்துகொண்டார். மொரிஷியஸின் முன்னேற்றத்தில் இரு தலைவர்களின் நிலையான மரபுகளையும், இந்தியா-மொரிஷியஸ் உறவுகளுக்கு ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்குவதையும் பிரதமர் மோடி நினைவு கூறினார்.

2. பிரதமர் திரு.நரேந்திர மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் திரு.நவீன் சந்திரா ராம்கூலம் இருவரும் வரலாற்றுமிக்க தோட்டத்தில் "ஏக் பேட் மா கே நாம்" என்ற முன்முயற்சியின் கீழ் ஒரு மரக்கன்றை நட்டு வைத்தனர்.

போர்ட் லூயிஸ்

மார்ச் 11, 2025